நினைவூட்டு – 2 / தனி கவனம் / மிக மிக அவசரம்/

வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலை) செயல்முறைகள்
ஓ.மு.எண் 2328/அ2/2025 நாள் 29.07.2025

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் மெட்ரிக்/ தனியார் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளின் விவரங்கள் ஜியோ டேக்கிங் (GEO -TAGGING) முறையில் செய்ய இணைப்பில் காணும் படிவத்திலும் Google sheet லும் பூர்த்தி செய்து உடன் அனுப்ப கோருதல் – தொடர்பாக. |
| பார்வை | 1. மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரின் கடித ந.க.எண் 53/2025 நாள் 11.07.2025<br>2. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள் ந.க.எண் 2322/ஆ2/2025 நாள் 11.07.2025 |

பார்வை 1-ல் காணும் கடிதம் மற்றும் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு / அரசு நிதியுதவி பெறும்/ மெட்ரிக்/ தனியார் / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலுள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் உட்கட்டமைப்புகளின் விவரங்கள் ஜியோ டாக்கிங் (GEO -TAGGING) செய்து அதன் விவரங்களை சமர்பிக்க கோரி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே தங்கள் பள்ளிகளிலுள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் விளையாட்டு உட்கட்டமைப்புகளின் விவரங்களை ஜியோ டேக்கிங் (GEO -TAGGING) செய்து, அதன் விவரங்களை 18.07.2025 அன்று சமர்ப்பிக்க கோரியும் இதுநாள் வரை ஒரு சில பள்ளிகள் சமர்ப்பிக்கவில்லை. இனியும் காலம் தாழ்த்தாமல் 24.07.2025 மற்றும் 27.07.2025 மாலை 3.00 மணிக்குள் தங்கள் பள்ளி சார்பான விவரங்களை இணைப்பில் காணும் படிவத்திலும் Google Sheetலும் பூர்த்தி செய்து எவ்வித கலங்களும் விடுப்படாமல் தலைமை ஆசிரியர் / தாளாளரின் கையொப்பமிட்ட 2 பிரதிகளில் இவ்வலுவலகத்திற்கு சமர்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் இதுநாள் வரை இணைப்பிலுள்ள சார்ந்த தலைமையாசிரியர்கள் விவரத்தினை அனுப்பாத காரணத்தினால் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலருக்கு தொகுத்து அனுப்ப முடியவில்லை. நாளை 30.07.2025 அன்றே கடைசி நாள். ஆகையால் எந்தவொரு சுணக்கமில்லாமல் ஒத்துழைப்பு நல்குமாறும், இப்பணியை செவ்வனே முடித்து தருமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காண் தங்கள் பள்ளி சார்ந்து இன்மை அறிக்கை எனில் கட்டாயம் இன்மை அறிக்கை சமர்பிக்கப்பட வேண்டும்.

**இணைப்பு**
உரிய படிவம்

// ஒப்பம் xxx
பெ.செந்தில் குமார்
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)
வேலூர்.

**பெறுநர்**
தலைமையாசிரியர்கள்/ தாளாளர்கள்
அனைத்து வகை அரசு / அரசு உதவி பெறும் / மெட்ரிக் /
உயர்நிலை/ மேல்நிலைப்பள்ளிகள் வேலூர் மாவட்டம்.